**கமநல அபிவிருத்தி நிதியம் - 2024**
**---------------------------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கான தாக்கங்கள் தவிர, நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 1.5 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதுடன், தொடர்ந்தியங்கும் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த

வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் நிதியம் செயற்பட்டிருந்தது என்பதும், வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5. நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 20 பிரகாரம் ரூபா 4.87 மில்லியன் பெறுமதியான கணினி மென்பொருள் நிதி நிலைமைக் கூற்றில் தனியே காண்பிக்கப்படாது ஆதனம் பொறி உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது கணினி மென்பொருள் தனியே காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | கணக்கீட்டு நியமம் பிரகாரம் கணினி மென்பொருளின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் தனியே காண்பிக்கப்படல் வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தின் பேரேட்டின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொகைநகல் இயந்திரத்திற்கான பெறுமானத் தேய்வு ரூபா 310,450 ஆக காணப்பட்ட போதிலும் நிதி நிலைமைக் கூற்றில் அப் பெறுமதி பூஜ்ஜியமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | தொகைநகல் இயந்திரத்திற்கான பெறுமானத் தேய்வு 2025 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | பெறுமானத் தேய்வு சரியாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டுகளில் ஜப்பான் யென் உதவியாக பெற்றுக் கொள்ளப்பட்டு விவசாயிகளுக்கு மீண்டும் அறவிடும் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள 2 சில்லு டிரக்டர், 4 சில்லு டிரக்டர் மற்றும் 2KR நீர் இறைப்பிகளின் பெறுமதிக்கு தொடர்புடையதாக விவசாயிகளிடமிருந்து தவணைகளாக பெற வேண்டிய தொகை, கடன்பட்டோர் கணக்கில் வரவு வைக்கப்பட்டு செலுத்தப்படாத வைப்புத் தவணை கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அவ்வாறு தவணைகளாக பெறப்பட்டிருந்த ரூபா 6.13 மில்லியன் தொகை மீளாய்வாண்டில் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் கடன்பட்டோர் மற்றும் தவணைக் கணக்கில் அகற்றப்படாமையினால் அக் கணக்கு நிதி நிலைமைக் கூற்றில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஜப்பான் யென் உதவியாக விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 02 சில்லு டிரக்டர், 04 சில்லு டிரக்டர் மற்றும் 2KR நீர் இறைப்பிகளுக்காக கடன்பட்டோர்களிடமிருந்து மீளாய்வாண்டினுள் பெறப்பட்ட ரூபா 6.13 மில்லியன் தொகை எதிர்காலத்தில் மிகைகட்டணத்திற்கு செலவு வைக்கப்பட்டு திரட்டப்பட்ட வருமானத்தில் இணக்கம் செய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கின்றேன். | கடன்பட்டோர் தவணை பெறலானது கடன்பட்டோர் தவணை கணக்கில் மற்றும் செலுத்தப்படாத வைப்பு தவணை கணக்கிலிருந்து அகற்றப்படல் வேண்டும். |
| (இ) | 2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இது வரையில் பணிகள் நிறைவு செய்யப்படாத தகவல் முகாமைத்துவ மென்பொருள் அமைப்பிற்காக ஏற்கப்பட்ட ரூபா 20.26 மில்லியன் பெறுமதி, நடைமுறையிலுள்ள வேளைகளின் கீழ் கணக்கிடப்படாது இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட்டிமையினால் இயந்திர உபகரணங்கள் இப் பெறுமதியினால் அதிகமாக மற்றும் நடைமுறையிலுள்ள வேளைகள் அப் பெறுமதியினால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது தகவல் முகாமைத்துவ மென்பொருள் அமைப்பில் நடைமுறையிலுள்ள வேளைகளின் கீழ் கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கின்றேன். | மென்பொருள் அமைப்பிற்காக ஏற்கப்பட்ட பெறுமதி சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் (ரூபா மி.) | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் (ரூபா மி.) | வேறுபாடு (ரூபா மி.) | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | நீர் பாய்வு கையேடு | 0.82 | 0.49 | 0.33 | 2025 ஆம் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது வழுக்கள் சீர் செய்யப்படுவதற்கு குறித்த உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. | மீதிகள் இடையே வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்தல் வேண்டும். |
| (ஆ) | காசு மீதி | 424.44 | 425.09 | 0.65 | எதிர்காலத்தில் இந்த வழு சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த மீதிகள் இடையே வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்தல் வேண்டும். |
| (இ) | 2 சில்லு டிரக்டர், 2 சில்லு டிரக்டர் ட்ரேலர், 4 சில்லு டிரக்டர், 4 சில்லு டிரக்டர் ட்ரேலர், 2KR நீர் இறைப்பி | 130.88 | 114.38 | 16.50 | 2025 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | அட்டவணை மீதி மற்றும் நிதிக் கூற்றுக்கள மீதி இடையே வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1. பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல சேவை நிலையங்கள் மற்றும் விவசாய அமைப்புகளுக்கு 2010 ஆம் ஆண்டில் நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 02 சில்லு டிரக்டர் ட்ரேலர் மற்றும் 04 சில்லு டிரக்டர் ட்ரேலருக்காக 10 ஆண்டுகள் தொடக்கம் அறவிடப்பட வேண்டிய ரூபா 3.94 மில்லியன் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2010 ஆம் ஆண்டில் பெற்றுக் கொடுக்கப்பட்ட 02 சில்லு டிரக்டர் ட்ரேலர் மற்றும் 04 சில்லு டிரக்டர் ட்ரேலர் நீண்ட காலமாக காணப்படுகின்றது. இவற்றின் உதிரிப் பாகங்கள் பற்றாக்குறையின் காரணமாக பல இயந்திர உபகரணங்கள் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. 04 சில்லு டிரக்டர் ட்ரேலருக்காக 2024.12.31 இல் ரூபா 0.35 மில்லியன் அறவிடப்பட்டு தொடர்ந்தும் அறவிடப்படுவதற்கு ரூபா 2.52 மில்லியன் தொகை காணப்படுகின்றது. அத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 02 சில்லு டிரக்டர் ட்ரேலரின் மொத்த பெறுமதி ரூபா 2.35 மில்லியன் ஆவதுடன், 2024.12.31 இல் ரூபா 0.92 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதுடன் | நிலுவை தொகை விரைவாக அறவிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ரூபா 1.43 மில்லியன் நிலுவை தொகையொன்று காணப்படுகின்றமையினால், தற்போது நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஆ) | ஜப்பான் யென் உதவி கருத்திட்டத்தின் கீழ் 2006, 2008, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 02 சில்லு டிரக்டர்களுக்காக அறவிடப்பட வேண்டிய தொகை 2015 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய போதிலும் ரூபா 97.97 மில்லியன் தொகை இது வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2006, 2008, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 02 சில்லு டிரக்டர்களுக்காக அறவிடப்பட வேண்டிய தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், 2024.12.31 இல் ரூபா 121.69 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது. தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய ரூபா 97.97 மில்லியன் தற்போது அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைத் தொகை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | கடன்பட்டோர் மீதியினுள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படுவதற்குள்ள ரூபா 2.47 மில்லியனான 2KR கருத்திட்டத்தின் நீர் இறைப்பி தவணை மற்றும் ரூபா 9.99 மில்லியனான 04 சில்லு டிரக்டர் தவணை மீதிகள் இது வரையில் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024.12.31 இல் நீர் இறைப்பியின் பெறுமதி ரூபா 11.70 மில்லியனில் ரூபா 9.22 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா 202.47 மில்லியன் தொகை தொடர்ந்தும் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன், 04 சில்லு டிரெக்டர் தவணையானது 2024.12.31 இல் ரூபா 1.71 மில்லியன் அறவிடப்பட்டுள்ளதுடன், ரூபா 9.99 மில்லியன் நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவைத் தொகை விரைவில் அறவிடப்படல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க காநல அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் 97(2)(உ) மற்றும் கமநல சேவைகள் ஆணையாளரின் 439/92 ஆம் இலக்க மற்றும் 1992 இன் ஆகஸ்ட் 03 ஆம் திகதிய சுற்றறிக்கை | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கமநல சேவைகள் நிலையங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 15.67 மில்லியனான 20 சதவீத ஹேக்கர் வரி வருமானம் சட்டத்தின் பிரகாரம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி செயற்பாட்டு குழுவினால் 2024 மற்றும் அதற்கு முன்னர் பெற வேண்டிய பங்களப்புத் தொகை நிதியத்திற்கு பெற்றுக் கொடுப்பதற்கு நினைவூட்டல் கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அத் தொகை விரைவாக அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஹேக்கர் வரி வருமானம் விரைவில் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 97(3) பிரிவு | பிரிவிற்கு முரணாக நிதியத்திலிருந்து ரூபா 1.69 மில்லியன் தொகை கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் வளிபதனாக்கி இயந்திரங்கள் மற்றும் அச்சு இயந்திரமொன்று கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2024 பாதீட்டின் பொது செலவீனத்தின் கீழ் வளிபதனாக்கி இயந்திரங்கள் மற்றும் அடையாள அட்டை அச்சு இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதுடன், அது கமநல சட்டத்தின் 97(3) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டது. | சட்டத்தின் பிரகாரம் நிதியத்தின் நிதி பயன்படுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் | | | |
| (i) | நி.பி 633 | அரசாங்க அழுத்தகரின் ஆலோசனையின்றி மற்றும் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரமின்றி ரூபா 2.79 மில்லியன் பெறுமதியான 11,840 துணை பத்திரிக்கை புத்தகங்கள் தனியார் அச்சகமொன்றில் அச்சிடப்பட்டிருந்தது. | அரசாங்க அச்சகம் உட்பட 12 நிறுவனங்களில் விலைமனுக்கள் அழைக்கப்பட்டன. அதன் பிரகாரம் அரசாங்க அச்சகம் உட்பட 06 நிறுவனங்களில் விலைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அங்கு குறைவான விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிவ் ஆசிரி பிரின்டர்ஸ் நிறுவனத்திற்கு தொழிநுட்ப மீளாய்வு குழுவின் பரிந்துரை பிரகாரம் திணைக்களத்தின் பெறுகை சபையினால் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | நி.பி பிரகாரம் அரசாங்க அச்சகத்தினால் குறித்த ரசீது புத்தகங்கள் அச்சிடப்படல் வேண்டும். |
| (ii) | நி.பி 756 | நிதியத்திற்கு சொந்தமான நிலையான சொத்துக்கள் இது வரையில் சுற்றாய்வு செய்யப்படவில்லை. | 2025 ஆம் ஆண்டின் இறுதி கணக்கு தயாரிப்பதற்கு முன்னர் நிலையான சொத்துக்கள் தொடர்பான வருடாந்த சுற்றாய்வு மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. | நி.பி பிரகாரம் வருடாந்த சுற்றாய்வு மேற்கொள்ளல் வேண்டும். |
| (iii) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் நி.பி 876(3) | சட்டப்பூர்வமற்ற நிதியங்கள் விரைவில் இரத்து செய்யப்பட்டு அவற்றின் நிதி அரசின் ஒருங்கிணைந்த நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டிதுடன் சட்டபூர்வமற்ற நிதியங்கள் தொடர்ந்தும் நடத்திச் செல்லப்படுவதற்கு நியாயமான காரணங்கள் காணப்படுமிடத்து பாராளுமன்ற சட்டமொன்றின் ஊடாக சட்டபூர்வமாக்கப்பட்ட | அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமைத்துவத்தில் 2025.01.09 ஆந் திகதி நடத்தப்பட்ட கலந்துரையாடலின் போது இந்த நிதியம் சட்டப்பூர்வமாக்கப்பட்ட நிதியமாவதுடன், நிதியத்தில் நிறைவேற்றப்படுகின்ற பணிகளுக்கு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் நிதியேற்பாடு ஒதுக்கப்படுமென | அரச கணக்குகள் சுற்றறிக்கை மற்றும் நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டிய போதிலும் இந்த நிதியம் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மற்றும் குறித்த சட்டத்தின் பிரிவு திருத்தப்பட்டு நிதியம் மூடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கலந்துரையாடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்படுள்ளது. | |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 இலக்கம் கொண்ட திறைசேரிச் சுற்றறிக்கை | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 120.06 மில்லியன் ஆதனம் பொறி உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 120.06 மில்லியன் ஆதனம் பொறி உபகரணங்களுக்காக எதிர்காலத்தில் சொத்துக்கள் பதிவேடொன்று பேணிச் செல்லப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்கள் பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 83.39 மில்லியனான மிகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த ஆண்டின் மிகை ரூபா 49.22 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் செயற்பாட்டு மீளாய்வில் ரூபா 34.16 மில்லியன் அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு ஹேக்கர் வரி வருமானம் 82 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் செலவீனம் 40 சதவீதத்தினால் குறைந்தமை காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டிலிருந்து நிலவி வரும் ரூபா 450,000 ஆன இருப்பு பற்றாக்குறை தொடர்பான ஆய்வுகள் மீளாய்வாண்டு இறுதில் நிறைவு செய்யப்பட்டு நட்டம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த இருப்பு பற்றாக்குறை 1996 ஆம் ஆண்டு தொடக்கம் கமநல அபிவிருத்தி நிதியத்தின் இறுதி கணக்குகளில் காண்பிக்கப்பட்டு வருவதுடன், இது தொடர்பில் ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் இதற்கு தொடர்புடைய தரப்பினரிடம் ஆய்வொன்று நடத்துவதற்கு பொருத்தமானதென பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒழுக்காற்று பிரிவிற்கும் தெரிவிக்கப்பட்டு அதன் பிரகாரம் எதிர்காலத்தில் முறையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நட்டங்கள் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கமநல சேவை நிலையங்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு முற்பணமாக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 29.90 மில்லியன் தொகைஇது வரையில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல சேவை நிலையங்களின் வழங்கல் மேம்பாடு செய்தல் மற்றும் அபிவிருத்தி, கட்டிட உபகரணங்கள் பராமரித்தல், பௌதீக வளங்கள் அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகள், விவசாய சமூகத்திற்கு பயிற்சியளித்தலுக்காக பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணம் தீர்ப்பனவு செய்வதற்கு தொடர்புடைய தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், அது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். மேலும், Agrarian Awards இற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட முற்பணம் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. | முற்பணம் விரைவில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் டிரெக்டர் மற்றும் விவசாய உபகரணங்கள் ஏலத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 6.33 மில்லியன் வருமானம் திறைச்சேரிக்கு மாற்றப்படாது நிதியத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏலத்திலிருந்து பெறப்பட்ட வருமானமாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 6.33 மில்லியன் வருமானம் டிரெக்டர் மற்றும் விவசாய உபகரணங்கள் ஏலத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் என குறிப்பிடுகின்றேன். | டிரெக்டர் மற்றும் விவாசாய உபகரணங்கள் ஏல வருமானம் திறைச்சேரிக்கு மாற்றப்படல் வேண்டும். |
| (ஈ) | விவசாய சங்கங்கள்/ பெண்கள் விவசாய சங்கங்கள்/ இளைஞர் விவசாய சங்கங்களுக்கு புதிய தொழிநுட்பம் அறிமுகப்படுத்துவதற்கு ரூபா 9,000,000 ஆன பாதீடு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அப்பணி நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானதாகும். | தேவைப்பாடு சரியாக இனங்காணப்பட்டு பாதீடு தயாரித்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ தகவல் அமைப்பொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா ஒரு மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அப் பணி நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 04 கமநல சேவை நிலையங்களின் விவசாய வங்கிகள் மற்றும் விவசாய செயற்பாட்டு சபைகளுக்காக முகாமைத்துவ தகவல்கள் அமைப்பொன்று நிர்மாணிப்பதற்கு ரூபா ஒரு மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு அதற்காக கொழும்பு, கம்பஹா, குருநாகலை மற்றும் அநுராதபுர மாவட்டங்களில் கமநல சேவை நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள கமநல அபிவிருத்தி பிரதேச உத்தியோகத்தர்களின் குழு பிரிவு பிரதிநிதித்துவப்படுத்தும் உத்தியோகத்தர்கள், விவசாய வங்கிகள் பிரிவினை பிரதிநிதித்துவப்படுத்தி உத்தியோகத்தர்கள் பங்கேற்றதுடன், இந்த முன்னோடி நிகழ்சித்திட்டத்திற்கு செலவிடப்பட்ட செலவீனங்களுக்குரிய பட்டியல்கள் தற்போது | தகவல் அமைப்பு நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் விரைவாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. முகாமைத்துவ தகவல்கள் அமைப்பிற்குரிய 2024 யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்குரியதாக நடத்தப்பட்ட முன்னோடி கருத்திட்டத்தின் போது இனங்காணப்பட்ட பிரயோக ரீதியான சிக்கல்கள் தீர்க்கப்பட்டதன் பின்னர் அனைத்து கமநல சேவை நிலைய சபைகளுக்குரியதாக தகவல் அமைப்பின் நேரடி செல்பாடுகள் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள முன்மொழியப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் தகவல் அமைப்பிற்குரிய திருத்தம் மற்றும் மேலதிக அபிவிருத்தி நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.